# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.295/2025 | Date | : 26.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : லட்சுமி | Calling | : |
| Husband Name | : செந்தில் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.11.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி, தட்டாபட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 01 வருடம் 06 மாதத்திற்கு முன்பாக, இரவு சுமார் 09.00 மணியளவில் ஒரு நபர் எனது கணவரின் தொலைபேசியில் என்னை அழைத்து எனது கணவர் அவரது பல்சர் இருசக்கர வாகனத்தில் பச்சபட்டி ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது, கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்து சென்றுள்ளதாகவும் கூறினார்.

2) பின்னர், நான் அங்கு சென்று பார்த்தபோது அவருக்கு கால்களிலும் மற்றும் தலையிலும் பலத்த அடிப்பட்டிருந்தது. பின்னர், அவரை மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் அழைத்து சென்றோம். பின்னர், போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், மேல்சிகிச்சைக்காக எனது கணவரை ஈரோடு சுதா மருத்துவமனையில் சேர்த்தோம். அதன்பின்னர், எனது கணவரின் உடல்நிலை மோசமானதால் அவரை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர், எனது கணவர் மார்ச் 01ம் தேதி, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Lakshmi

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.295/2025 | Date | : 26.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : மகாலிங்கம் | Calling | : |
| Father Name | : முத்துசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.11.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கோரிகாடு, சத்யா நகரில் வசித்து Indusind வங்கியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 17-02-2024 ம் தேதி, இரவு சுமார் 08.30 – 09.00 மணியளவில் நானும்,என்னுடன் வேலை செய்யும் வெங்கடேசன் என்பவரும் அலுவலக பணியாக வடுகப்பட்டி சென்றுவிட்டு, எங்களது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம்.

2) அப்போது, எங்களுக்கு முன்னால் கூட்டமாக இருந்தது. அங்கே கார் ஒன்று நின்றுகொண்டிருந்தது. நாங்கள் சென்று கேட்டபோது இருசக்கரவாகனத்தில் வந்த ஒரு நபர் கீழே அடிப்பட்டு கிடந்தார். பின்னர், தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அடிப்பட்ட நபரை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நேரத்தில் அங்கிருந்த காரை ஓட்டி நபர் யார் என்று எங்களுக்கு தெரியவில்லை, பின்னர் விசாரித்தபோது ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய

காரை ஓட்டிவந்ததாக கூறினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

ஆஜர் எதிரி சங்ககிரியை சார்ந்தவர் என்றால் சரிதான். நான் வங்கியில் வேலை செய்வதால் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் என்றும், அவர் அஜாக்கிரதையாக காரை ஓட்டிவந்து எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த நபர்மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Mahalingam

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.295/2025 | Date | : 26.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : வெங்கடேஷ் | Calling | : |
| Father Name | : தமிழரசு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.11.2025.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அக்கமாபேட்டையில் வசித்து Indusind வங்கியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 17-02-2024 ம் தேதி, இரவு சுமார் 08.00 – 09.00 மணியளவில் நானும், என்னுடன் வேலை செய்யும் மகாலிங்கம் என்பவரும் அலுவலக பணியாக வடுகப்பட்டி சென்றுவிட்டு,மகாலிங்கத்தின் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம்.

2) அப்போது, நாங்கள் பச்சபட்டி பிரிவு அருகே வந்தபோது, அங்கு எங்களுக்கு முன்னால் 4-5 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அங்கே கார் ஒன்று நின்றுகொண்டிருந்தது. நாங்கள் சென்று கேட்டபோது இருசக்கரவாகனத்தில் வந்த ஒரு நபர் கீழே அடிப்பட்டு கிடந்தார். பின்னர், தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அடிப்பட்ட நபரை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நேரத்தில் அங்கிருந்த காரை ஓட்டி நபர் யார் என்று எங்களுக்கு தெரியவில்லை, பின்னர்

விசாரித்தபோது ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டிவந்ததாக கூறினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

ஆஜர் எதிரி சங்ககிரியை சார்ந்தவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வங்கியில் வேலை செய்வதால் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் என்றும், அவர் அஜாக்கிரதையாக காரை ஓட்டிவந்து எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த நபர்மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Venkatesh

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.295/2025 | Date | : 26.11.2025 |
| Deposition of Witness for | : **அ.சா.4** | Taluk | : |
| Name | : **மாதேஸ்** | Calling | : |
| Father Name | : **பழனிசாமி** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.11.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வடுகபட்டி, தட்டாபட்டியில் வசித்து மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 17-02-2024 ம் தேதி, எங்கள் ஊரை சார்ந்த செந்தில்குமார், என்பவர் பச்சபட்டி அருகே இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

2) அது சம்பந்தமாக போலிசார் கடந்த 22-02-2024 ம் தேதி, சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், கலைசெல்வனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1 வது சாட்சி கையொப்பம் கலைசெல்வன் என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Mathesh